

சென்னை தலைமைச் செயலகத்தில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில், 2024–2025–ஆம் ஆண்டில் பயிர் காப்பீட்டுத் திட்ட செயல்பாடு மற்றும் புயல் / மழை வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளான பயிர்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை ஆணையர் திருமதி ஆர். ஜெயா, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை உழவர் நலத் துறை அரசு செயலாளர் வ. தட்சிணாமூர்த்தி, வேளாண்மைத் துறை இயக்குநர் பி.முருகேஷ், காப்பீட்டு நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நகைக் கடன்: ஏலம் விடும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த

# ஒன்றிய அரசு ஏதும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

## மக்களவையில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்வி!

புதுடெல்லி, பிப்.12 -

**அதிகரிக்கும் நகைக் கடன் ஏலங்கள் பற்றி கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி எழுப்பிய கேள்வியைத் தொடர்ந்து ஒன்றிய நிதி அமைச்சர் அதற்கு பதிலளித்தார்.**



இதுபற்றிய விவரம் வருமாறு :-

மக்களவையில் நேற்று (பிப்ரவரி 10) தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி "வங்கி அல்லாத தங்க நகை அடகு நிறுவனங்கள் வாடிக்கையாளர்களின் நகைகளை ஏலம் விடுவது, தொடர்ந்து அதிகரித்து வருகிறது. குறிப்பாக, இந்த நிதியாண்டின் (2024-25) இரண்டாவது காலாண்டில் இருந்து அதிகரித்திருக்கிறது.

வங்கி சாராத நிதி நிறுவனங்களில் தங்க நகை கடன் வாங்கியோர் அதை திருப்பிக் கட்ட போதிய கால அவகாசம் கொடுக்கப்படாத நிலையில்.... இதுபோல திடீர் ஏலங்களால் பெரும் பாதிப்புக்கு ஆளாகின்றனர். பெருமளவிலான இந்த ஏலம் விடும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த அரசு ஏதும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மேலும் ரிசர்வ் வங்கி, கடந்த ஆண்டு வங்கி சாரா நிதி நிறுவனங்களுக்கு (NBFCs) தங்கக் கடன்களுக்கான ரொக்க விநியோகத்தை ரூ.20,000 ஆகக் கட்டுப்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளது. நாட்டில் 36% பேருக்கு வங்கிக் கணக்கே இல்லாத நிலையில்... வங்கி அல்லாத கடன் நிறுவனங்களின் தங்க கடன்களுக்கான ரொக்க விநியோகத்தை 20 ஆயிரம் ஆக கட்டுப்படுத்துவது ஏன்?" என்று கேள்விகளை எழுப்பினார்.

இவற்றுக்கு ஒன்றிய நிதித் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் பதிலளிக்கையில்,

"வங்கிகள் அல்லாத கடன் நிறுவனங்கள், மற்றும் வணிக வங்கிகள் அனைத்துக்கும் இது தொடர்பாக ஒரே மாதிரியான விதிமுறைகளைத்தான் ரிசர்வ் வங்கி வகுத்துள்ளது.

நிதித்துறை இணையமைச்சர் கூறியது போல, இந்த நகை ஏலம் என்பது பல கட்ட செயல்முறைகளின் தொடர்ச்சியாகவே நடைபெறுகிறது. சம்பந்தப்பட்ட வாடிக்கையாளருக்கு நகைக் கடன் பாக்கி தொடர்பான தகவல்கள் அனுப்பப்பட்டு, அதன் பிறகே, ஏல நடவடிக்கை என்ற சூழலுக்கு தள்ளப்படுகிறது.

இன்னும் சொல்லப் போனால், ஏல நடவடிக்கைகள் கடுமையான நிபந்தனைகளுக்குப் பிறகுதான் மேற்கொள்ளப்படுகின்றன. வாடிக்கையாளர் சார்ந்த மாவட்டத்துக்குள்தான் ஏலம் நடத்தப்பட வேண்டும், சம்பந்தப்பட்ட வாடிக்கையாளர் நேரில் வராவிட்டால் ஏலம் நடத்த முடியாது, நகை மதிப்பீடு முழுமையடையாவிட்டால் ஏலம் விட முடியாது, ஏலத் தொகை நிர்ணயம் செய்வதிலும் பல விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. கடந்த 3, 4 மாதங்களிலான நகை விலையில் 80%க்கு குறைவாக இருக்கக் கூடாது. தங்கத்தின் விலையை வங்கிகள் அல்லாத கடன் நிறுவனங்கள் நிர்ணயம் செய்வதில்லை.

ஏல நடவடிக்கைகளுக்கு முன் இதுபோன்ற கடுமையான நிபந்தனைகள் பின்பற்றப்படுகின்றன, இந்த நிபந்தனைகள் பின்பற்றப்படாமல் நகை ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால், நிபந்தனைகள் எங்காவது மீறப்பட்டிருந்தால் மாண்புமிகு உறுப்பினர் உடனடியாக எனது கவனத்துக்குக் கொண்டு வரலாம்.

அதேபோல தங்க கடன்களுக்கான ரொக்கம் தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட விலையில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான குறிப்பிட்ட நிகழ்வுகள் இருந்தால் அதையும் உறுப்பினர் எனது கவனத்துக்குக் கொண்டு வரலாம். அது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கிறேன்" என்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பதிலளித்தார்.

## 'வாட்ஸ் அப்' பில் வலம் வருவது!




### பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு

# பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் இழப்பீட்டுத் தொகை விரைவில் வழங்க நடவடிக்கை!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் ஆய்வுக் கூட்டம்!

சென்னை, பிப்.12-

சென்னை, தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (10.02.2025) வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில், கடந்த 2024 டிசம்பர் மாதம் ஏற்பட்ட பெஞ்சல் புயல் மற்றும் வடகிழக்கு பருவ மழையால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இழப்பீட்டுத் தொகையை விரைவில் வழங்க காப்பீட்டு நிறுவனங்களை வலியுறுத்துதல் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

2024-2025 ஆம் ஆண்டில், இதுவரை மொத்தம் 32 இலட்சம் ஏக்கர் பரப்பளவு காப்பீடு செய்யப்பட்டு, சுமார் 14 இலட்சம் விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். இதில் சம்பா / தாளடி / பிசானம் நெற்பயிரில் மட்டும் இதுவரை மொத்தம் 8 இலட்சம் விவசாயிகளை பதிவு செய்து 19 இலட்சம் ஏக்கர் சம்பா நெற்பயிர் பரப்பளவு காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் பெஞ்சல் புயல், வடகிழக்கு பருவ மழை மற்றும் பருவம் தவறிய மழையால் அதிகம் பாதிக்கப்பட்ட விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், அரியலூர், செங்கல்பட்டு, தர்மபுரி, கிருஷ்ணகிரி, இராணிப்பேட்டை, சேலம், காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருப்பத்தூர், திருச்சிராப்பள்ளி, கள்ளக்குறிச்சி, இராமநாதபுரம், தென்காசி, திருநெல்வேலி, மதுரை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் சம்பா நெற்பயிர் அறிவிக்கை செய்யப்பட்ட பகுதிகளில் திட்ட விதி முறைகளின்படி பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்தி இழப்பீட்டுத் தொகையை விரைவில் கணக்கீடு செய்து விவசாயிகளுக்கு வழங்க வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் வலியுறுத்தப்பட்டது.

இதன்படி நடப்பு சம்பா பருவத்திற்கு 39,832 பயிர் அறுவடை பரிசோதனைகள் திட்டமிடப்பட்டு, இதுவரை 22,868 பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. முதற்கட்டமாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களில், பயிர் அறுவடை பரிசோதனைகள் முழுவதுமாக முடிந்த அறிவிக்கை செய்யப்பட்ட பகுதிகளில், தகுதி வாய்ந்த கிராமங்களுக்கு 2025 பிப்ரவரி மாதம் இறுதி வாரத்தில் இழப்பீட்டுத் தொகை வழங்கவும் பிப்ரவரி மாத இறுதிக்குள் முடிவடையும் பயிர் அறுவடை பரிசோதனைகளுக்கும் வழக்கமாக ஜுன் மாதத்தில் வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை படிப்படியாக 2025 மார்ச் மாதத்திற்குள்ளாகவே விவசாயிகளின் வங்கிக்கணக்குகளில் வரவு வைக்கவும் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, புள்ளியியல் மற்றும் பொருளியல் துறை ஆணையர் திருமதி ஆர்.ஜெயா, வேளாண்மை இயக்குநர் பா.முருகேஷ் மற்றும் காப்பீட்டு நிறுவனங்களின் மண்டல மேலாளர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டினை 2030–க்குள்

# கொத்தடிமைத் தொழிலாளர் முறை இல்லாத மாநிலமாக உருவாக்க வேண்டும்!

## அமைச்சர் சி.வெ.கணேசன் அறிவுறுத்தல்!

சென்னை, பிப்.12-

கொத்தடிமைத் தொழிலாளர் முறையினை முற்றிலும் ஒழித்திடவும் மற்றும் தமிழ்நாட்டை கொத்தடிமைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக உருவாக்கிடவும், மாநில அளவிலான கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தின விழிப்புணர்வுக் கூட்டம் சென்னை, தியாகராயர் நகரில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமையில் நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தின விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை துவக்கி வைத்து, கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தின உறுதிமொழியினை அமைச்சர் சி.வெ. கணேசன் முன்னிலையில் அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் சி.வெ.கணேசன் பேசியதாவது:

தொழிலாளர்கள் மீது மிகுந்த அக்கறை கொண்ட நமது முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின்படி கொத்தடிமை தொழிலாளர் முறையை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும் என்ற சீரிய முயற்சியுடன், உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கொத்தடிமைத் தொழிலாளர்கள் கண்டறியப்பட்டால், 24 மணி நேரத்திற்குள் அவர்கள் மீட்கப்பட்டு, உடனடி நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது.

அவ்வகையில், இவ்வரசு பொறுப்பேற்றது முதல், 570 கொத்தடிமைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டு, உடனடி நிவாரணத் தொகையாக 1 கோடியே 89 இலட்சத்து 40 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற வழக்கு தண்டனையில் முடிவுற்ற பின்னர், மீட்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களில் ஆண் தொழிலாளர்களுக்கு ரூ.1,00 இலட்சம், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ரூ.2.00 இலட்சம் மற்றும் இதர சிறப்புப் பிரிவு தொழிலாளர்களுக்கு ரூ.3.00 இலட்சம் இறுதி நிவாரணத் தொகையாக வழங்கப்படுகிறது.

மேலும் மீட்கப்பட்ட கொத்தடிமை தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் நோக்கில், பல்வேறு துறைகளின் வாயிலாக மறுவாழ்வு நடவடிக்கைகளும், நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன என்றும், 2030-ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டினை கொத்தடிமைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக உருவாக்க வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களின் நோக்கத்தினை நிறைவேற்றும் வகையில் அனைவரும் பாடுபட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில், மீட்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களின் குறுநாடகம் நடைபெற்றது. 2023-24ம் ஆண்டில் கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பில் சிறப்பாக பணிபுரிந்த சென்னை, தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) திருமதி. ஜெயலட்சுமி, சேலம் மாவட்ட தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதர துணை இயக்குநர் திருமதி. இலக்கியா, மற்றும் வருவாய் கோட்டாச்சியர் திருமதி.க்யூரி மற்றும் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் செல்வம் ஆகியோருக்கு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கேடயம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அரசு செயலாளர் கொ.வீரராகவ ராவ், தொழிலாளர் ஆணையர் சி.அ.ராமன், காவல்துறை தலைவர் திருமதி கயல்விழி, தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக் குழு துணை செயலாளர் / நீதிபதி திருமதி ச. வேங்கடலட்சுமி, சென்னை, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக் குழுச் செயலாளர் / முதுநிலை சார்பு நீதிபதி செந்தில் பாபு, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் செ. ஆனந்த், காவல் துறை துணை ஆணையர் (பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றப்பிரிவு) திருமதி ஜி.வனிதா கூடுதல் தொழிலாளர் ஆணையர்கள், தொழிலாளர் இணை ஆணையர்கள், கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பில் தொடர்புடைய பிற துறை அலுவலர்கள், தொழிலாளர் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் 335 அங்கன்வாடிகளில் பணிபுரியும் சமையலர்கள் மற்றும் உதவியாளர்கள் 770 நபர்களுக்கு போர்வைகள், சேலை உள்பட 35 அங்கன்வாடிகளுக்கு எடை இயந்திரம் உள்ளிட்டவை வழங்கும் நிகழ்வு மத்திய மாவட்டக் கழக அலுவலகத்தில் மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக துணை பொதுச்செயலாளர், நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று வழங்கினார். உடன் தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் சுப.சீதாராமன், பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப்,மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பேச்சிபாண்டியன், பொதுக்குழு உறுப்பினர்கள் ராஜ், பரமசிவ ஐயப்பன், மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த், மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்,தர்மன், இளைஞர் அணி துணை அமைப்பாளர் மீரான்மைதீன் உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.